முற்பகல் 10–55

7. விதி 110–ன்கீழ் அறிக்கைகள்

(அ) சத்துணவு, அங்கன்வாடி மையங்களை மேம்படுத்துதல் மற்றும் காலிப் பணியிடங்களை நிரப்புதல் குறித்து மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110–ன்கீழ் இரண்டு அறிக்கைகளை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள்; அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நம் நாடு என்னும் தோட்டத்திலே, நாளை மலரும் முல்லைகளே" என்று குழந்தைகளைப் பற்றிப் பாடினார் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி). இன்றைய குழந்தைகளே நாளைய சமுதாயத்தின் நம்பிக்கை நட்சத்திரங்கள் ஆவர். சுகாதாரம், பாதுகாப்பு, கல்வி ஆகியவற்றை எவ்வித இடர்பாடுமின்றிப் பெற்று, மகிழ்ச்சி நிறைந்த சூழ்நிலையில் வளரும் குழந்தைகளே வளமான மற்றும் வலிமையான தலைமுறையினராக உருவாகின்றனர்.*

தமிழகத்திலுள்ள 6 மாதம் முதல் 6 வயது வரையிலான குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் வளரிளம் பெண்கள் ஆகியோரிடையே காணப்படும் ஊட்டச்சத்துக் குறைபாட்டைக் கண்டறிந்து, அதனை அகற்றி, ஊட்டச்சத்து குறைபாடற்ற மாநிலமாகத் தமிழ்நாட்டை மாற்றும் வகையில், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின்கீழ் உள்ள அங்கன்வாடி மையங்கள்மூலம், பல்வேறு பணிகளை மேற்கொள்ள, 2002 ஆம் ஆண்டு எனது அரசால் செயல் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து, 2003 ஆம் ஆண்டு, ஊட்டச்சத்துக் குறைபாடற்ற தமிழகத்தை உருவாக்கும் வகையில், ஒரு புதிய கொள்கை வெளியிடப்பட்டது.

இதனடிப்படையில், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின்கீழ், பல உதவிகள் வழங்கப்படுகின்றன. 6 மாதம் முதல் 36 மாதம் முடிய உள்ள குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் வளரிளம் பெண்களுக்கு இணை உணவு வழங்குதல்; 2 வயது முதல் 6 வயதிற்குட்பட்ட

2011 செப்டம்பர் 12] [செல்வி ஜெ ஜெயலலிதா]

குழந்தைகளுக்குச் சத்துணவு அளித்தல்; முதியோர் உதவித் தொகை பெறுபவர்களுக்கு மதிய உணவு அளித்தல்; சுகாதாரப் பணிகள் மேற்கொள்ளுதல்; உயர் மருத்துவச் சிகிச்சைக்காகப் பரிந்துரைத்தல்; பள்ளிசாரா முன்பருவக் கல்வி அளித்தல்; ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரக் கல்வி அளித்தல்; வளரிளம் பெண்களுக்கு ஊட்டச்சத்து மற்றும் வாழ்க்கைக் கல்வி வழங்குதல் ஆகியவை இந்தத் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படுகின்றன.

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின்கீழ், 6 மாதம் முதல் 6 வயது வரையிலான குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு வருடத்தில் 300 நாட்களுக்குச் செரிமானத் தன்மை Amylase நிறைந்த இணை உணவு வழங்கப்படுகிறது. நடப்பாண்டில் பல்வேறு நிலைகளிலுள்ள பயனாளிகளுக்கு இணை உணவு வழங்க 190 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், 2 வயது முதல் 6 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கும், முதியோர் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கும் புரதச் சத்துமிக்க சத்தான, சூடான மதிய உணவு அனைத்து மையங்களிலும் வருடத்தில் 365 நாட்களுக்கும் வழங்கப்படுகிறது. இந்தியாவிலேயே தமிழகத்தில் மட்டும்தான், ஓய்வூதியம் பெறும் முதியோர்களுக்குச் சமைக்கப்பட்ட சூடான மதிய உணவு குழந்தைகள் மையத்தில் வழங்கப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிறந்தது முதல் 6 வயது வரையுள்ள குழந்தைகள், வளரிளம் பெண்கள், கர்ப்பிணிப் பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் ஓய்வூதியம் பெறும் முதியோர் உள்ளிட்ட 28 இலட்சத்திற்கும் மேற்பட்டோர் பயன்பெறும் குழந்தைகள் மையங்களின் பாதுகாப்பினை உறுதி செய்யவும், மையங்களின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும், பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ளவும் எனது அரசு முடிவு செய்துள்ளது. அந்த வகையில், சொந்தக் கட்டடங்களில் செயல்படும் சிறிய பழுதுகளுடன் உள்ள 10,372 மையங்கள் மற்றும் பெரிய பழுதுகளுடன் உள்ள 7,449 மையங்கள், ஆக, பழுதுபட்டுள்ள மொத்தம் 17,821 மையங்களும் இந்த ஆண்டே 47 கோடியே, 61 இலட்சம் ரூபாய் செலவில் பழுது நீக்கிச் சீரமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின்கீழ் இயங்கும் குழந்தைகள் மையங்களுக்கு, ஆர்வமுடன் குழந்தைகள் வருவதற்கும், விளையாட்டுச் சாதனங்கள் வாயிலாக முன்பருவக்

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2011 செப்டம்பர் 12

கல்வி பயில்வதற்கும் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இம்மையங்களில் கோடைக் காலத்தில் வெப்பத்தினாலும், மழை மற்றும் குளிர் காலங்களில் போதிய வெளிச்சமின்மையாலும், குழந்தைகள் அவதியுறாமல் இருக்கும் வகையில், மின் விசிறி மற்றும் மின் விளக்கு வசதி ஏற்படுத்தித் தர எனது அரசு முடிவு செய்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இதன்படி, மின் வசதியில்லாத 45,345 குழந்தைகள் மையங்களில், 27 கோடியே 21 இலட்சம் ரூபாய் செலவில், உட்புற மின் கட்டமைப்பு வசதி ஏற்படுத்தப்படுவதுடன் (மேசையைத் தட்டும் ஒலி) மின்விசிறி மற்றும் மின் விளக்கு ஆகியவை பொருத்தப்படும்.

சுற்றுச்சூழல் மாசு காரணமாக, குழந்தைகளுக்கு நோய் ஏற்படுவதைத் தடுக்கும் வகையில், சுற்றுப்புறச் சுகாதாரத்தைப் பேணவும், குழந்தைகளிடம் இளம் வயதிலேயே கழிப்பறையைப் பயன்படுத்தும் பழக்கத்தை ஊக்குவிக்கவும், குழந்தைகள் மையங்களில் குழந்தைகள் நேயக் கழிப்பிடங்கள் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இக்கழிப்பிடங்கள் குழந்தைகள் பயன்படுத்துவதற்கு ஏதுவான வகையில் வடிவமைக்கப்படும். இதற்காக இந்த ஆண்டு 23 கோடியே 78 இலட்சம் ரூபாய் செலவில் 29,727 குழந்தைகள் மையங்களில் குழந்தைகள் நேயக் கழிப்பிடங்கள் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–00

சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையின்கீழ் இயங்கும், சத்துணவு மையங்கள் மற்றும் அங்கன்வாடி மையங்களில் 28,596 பணியிடங்கள் காலியாக உள்ளன. இந்தக் காலிப் பணியிடங்கள் அனைத்தும் விரைவில் நிரப்பப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இவ்வாறு எனது அரசு மேற்கொண்டு வரும் முயற்சிகளாலும், செயல்படுத்தி வரும் திட்டங்களாலும் தாய்–சேய் நலம் காப்பதில் தமிழகம் முதன்மை மாநிலமாகத் திகழ்கிறது என்பதைப் பெருமிதத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(ஆ) திரு. சிங்காரவேலர், திரு. ஜீவரத்தினம் ஆகியோருக்கு மணிமண்டபம் மற்றும் திரு. சிதம்பரநாதன் அவர்களுக்கு சிலை அமைத்தல் குறித்து மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டின் சுதந்திரத்திற்காகப் போராடிய